முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2023-02-25
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, பொது நோக்கு நிதிக் கூற்றுக்களின் நோக்கமானது நிறுவனத்திற்கான வளங்களை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் பயனர்களுக்கு பயன்தரும் நிதித் தகவல்களை வழங்குவதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) (i) நிறுவனமொன்றின் நிதித் தகவல்களைப் பயன்படுத்தும் இரண்டு (02) வெவ்வேறு பயனர்களை (users) **அடையாளங் காண்க.** (01 புள்ளி)

(ii) நிறுவனமொன்றின் பயனர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானத்திற்கு இரண்டு (02) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, அறிக்கையிடல் நிறுவனம் என்பதாற் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

நிலைபேறான அறிக்கையிடலானது மும்மடங்கான கீழ் மட்ட அறிக்கையிடல் என அழைக்கப்படுவதுடன் அதனை நிறுவன சமூக பொறுப்பு (CSR) பற்றிய அறிக்கையிடலில் பயன்படுத்த முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிலைபேறான அறிக்கையிடலின் இரண்டு (02) நோக்கங்களை (purposes) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) "நிலைபேறான அறிக்கை" என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

***மானெல் பீ.எல்.சீ.*** ஆனது 2021 ஏப்ரல் 01 இல் ***ஒலு பீ.எல்.சீ.*** இன் 60% மான சாதாரண பங்கு மூலதனத்தை ரூபா 90 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது. அந்தத் திகதியில் ***ஒலு பீ.எல்.சீ.*** இன் இனங்காணத்தக்க நிகர சொத்துக்களின் சீர் மதிப்பு ரூபா 105 மில்லியனாகவும் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர் மதிப்பு ரூபா 30 மில்லியனாகவும் காணப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ***ஒலு பீ.எல்.சீ.*** இன் கொள்வனவு மீதான நன்மதிப்பைக் (goodwill) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) "துணைக் கம்பனி (Subsidiary Company)" என்னும் பதத்தை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, சம்பந்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களுக்கு அவற்றைச் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி, கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, முன்னிலைப்படுத்துவதுடன் தொடர்புடைய மூன்று (03) ஒழுங்குபடுத்தல் தேவைகளை (regulatory requirements) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(A) கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சிக்மா எக்ஸ்போட்ஸ் கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிவிதி (taxable) இலாபம் ரூபா 800,000/-.

(2) 2021 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து ரூபா 150,000/-.

(3) நடைமுறையல்லாச் சொத்துக்களின் முன்கொணரற் பெறுமதியும் வரி அடிப்படையும் கீழ்வருமாறு :

| சொத்துக்கள் | முன்கொணரற் பெறுமதி (கணக்கீட்டில் எழுதப்பட்ட பெறுமதி) 2022 மார்ச் 31 இல் (ரூபா) | வரி அடிப்படை (ரூபா) |
|---|---|---|
| இயந்திரம் | 10,000,000 | 9,000,000 |
| மோட்டார் வாகனங்கள் | 6,000,000 | 5,500,000 |

(4) 2022 மார்ச் 31 இல் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 500,000/-.

(5) நிறுவன வரி வீதம் 14%.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பு. (03 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிச் செலவினங்கள். (02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி** கணினி உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் ஊடுசெயல்கள்/ நிகழ்வுகள் அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் ஆனால் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை அங்கீகரிப்பதற்கு முன்னர் இடம்பெற்றவையாகும்.

(1) 2022 ஏப்ரல் 24 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு ஆண்டிற்கான இலாபத்தில் பங்கொன்றிற்கு ரூபா 6/- என்ற அடிப்படையில் இறுதிப் பங்கிலாபமொன்றை வழங்க பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்திருந்தது. இத்தகைய 100,000 பங்குகள் விநியோகத்தில் உள்ளன.

(2) மூன்று (3) முன்னாள் ஊழியர்களால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கம்பனிக்கு எதிராக தொழில் தீர்ப்பாயத்தில் (labour tribunal) வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 26 இல் வழங்கப்பட்ட இதன் தீர்ப்பில் ஒவ்வொரு ஊழியருக்கும் தலா ரூபா 2.5 மில்லியன் நட்டஈட்டை வழங்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தது.

(3) மடிக்கணினிகளின் நவீன பதிப்பின் வருகை காரணமாக, தற்போதுள்ள மடிக்கணினிகள் 50% கழிவு (தள்ளுபடி) விலையில் மடிக்கணினியொன்று ரூபா 55,000/- என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டன. மடிக்கணினியொன்றின் கிரயம் ரூபா 80,000/-. 2022 மார்ச் 31 இல் 100 மடிக்கணினிகள் எஞ்சியிருந்தன. இந்த அனைத்து மடிக்கணினிகளும் 2022 ஏப்ரல் முதல் வாரத்தில் விற்பனை செய்யப்பட்டன.

(4) 2022 ஏப்ரல் 09 ஆந் திகதி, அவிசாவளையில் அமைந்துள்ள கம்பனியின் களஞ்சியத்தில் மின் ஒழுக்கு காரணமாக தீ பரவல் ஏற்பட்டிருந்தது. இதன்போது ரூபா 2.8 மில்லியன் கிரயமான இருப்பு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(5) ஆண்டின் காலப்பகுதியில் காசுச் சேகரிப்புடன் தொடர்புடைய ரூபா 75,000/- மோசடியொன்று 2022 ஏப்ரல் 05 இல் கண்டுபிடிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்படலாம் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட ABC லீசிங் கம்பனியானது** 3 வருட கால நிதிக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் 2021 ஏப்ரல் 01 இல், **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனிக்கு** இயந்திரமொன்றை விற்பனை செய்தது. இயந்திரத்தின் சீர் மதிப்பு ரூபா 2,400,000/- ஆகும். வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் ரூபா 1,205,375/-. இது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆந் திகதி செலுத்தப்பட வேண்டும். உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 24% ஆகும். **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அதன் 1 ஆவது குத்தகைத் தவணைக் கட்டணத்தை 2022 மாரச் 31 இல் செலுத்தியது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**வரையறுக்கப்பட்ட ABC லீசிங்** கம்பனியின் (குத்தகைக்குக் கொடுப்பவர்) 2022 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகளைத் **தயாரிக்குக.**

(a) குத்தகை வருமதிக் கணக்கு (04 புள்ளிகள்)

(b) ஈட்டப்படாத (unearned) நிதி வருமானக் கணக்கு (02 புள்ளிகள்)

(B) 2022 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட ஷாம் கம்பனியின்** மோட்டார் வாகனம் ஒன்றினது முன்கொணரற் பெறுமதி ரூபா 3,600,000/- ஆகவுள்ளதுடன் இந்த மோட்டார் வாகனம் 2019 ஏப்ரல் 01 இல் ரூபா 4,800,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கம்பனி 2022 மார்ச் 31 இல் சேத இழப்புச் சோதனை ஒன்றை முன்னெடுத்திருந்ததுடன் அதில் மோட்டார் வாகனத்தின் விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட சீர் மதிப்பு (fair value less cost of disposal) ரூபா 2.8 மில்லியனாகக் காணப்பட்டதுடன் பயன்பாட்டுப் பெறுமதி ரூபா 3 மில்லியனாகவும் காணப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 36 இன்படி, மோட்டார் வாகனத்தின் சேத இழப்பு நட்டத்தைக் (impairment loss) **கணிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

2022 மார்ச் 31 மற்றும் 2021 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான **வரையறுக்கப்பட்ட சோழா டிரேடிங் கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட சோழா டிரேடிங் கம்பனியின்**
**நிதி நிலைக் கூற்றுகள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2022 | 2021 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 7,500 | 6,500 |
| திரள் தேய்மானம் | (1,200) | (1,000) |
| **முன்கொணரற் பெறுமதி** | **6,300** | **5,500** |
| **நடைமுறைச் சொத்துகள் :** | | |
| தொக்குகள் | 1,100 | 1,500 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 1,380 | 2,020 |
| காசும் காசுச் சமானங்களும் | 1,110 | 700 |
| | **3,590** | **4,220** |
| **மொத்தச் சொத்துகள்** | **9,890** | **9,720** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 6,500 | 6,500 |
| கைக்கொள் இலாபம் | 750 | 600 |
| | **7,250** | **7,100** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 1,000 | 1,200 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 480 | 420 |
| | **1,480** | **1,620** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 800 | 650 |
| குறுங்காலக் கடன்கள் | 120 | 120 |
| செலுத்த வேண்டிய வட்டி | 150 | 100 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 90 | 130 |
| | **1,160** | **1,000** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **9,890** | **9,720** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்கள் ரூபா 110,000/-.

(2) 2021 ஏப்ரல் 01 இல் இயந்திரமொன்று ரூபா 1,500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. இயந்திரத்தின் கிரயம் ரூபா 1,600,000/- என்பதுடன் 2021 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் ரூபா 350,000/-. இந்தப் பரிவர்த்தனைக்கு மேலதிகமாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் காணப்படும் வித்தியாசமானது 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காணியொன்றின் கொள்வனவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(3) ஆண்டிற்கான கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூபா 125,000/-.

(4) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூபா 300,000/- ஐ இடைக்காலப் பங்கிலாபமாகச் செலுத்தியது.

(5) ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 100,000/-

**நீங்கள் செய்யவேண்டியது :**

<u>நேரில் முறையைப் பயன்படுத்தி,</u> 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சோழா டிரேடிங் கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதியானது 2022 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட நிடோ லங்கா கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது :

**வரையறுக்கப்பட்ட நிடோ லங்கா கம்பனி**

**2022 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (12,000,000 சாதாரண பங்குகள்) | | 120,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 5,000 |
| கைக்கொள் இலாபம் - 2021 ஏப்ரல் 01 இல் | | 10,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் / மீள்மதிப்பீட்டுத் தொகையில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணி - மீள்மதிப்பீட்டுத் தொகையில் - ரூபா 50 மில்லியன்) | 80,000 | |
| இயந்திரம் | 20,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 10,000 | |
| **திரள் தேய்மானம் - 2021 ஏப்ரல் 01 இல் :** | | |
| கட்டடம் | | 12,000 |
| இயந்திரம் | | 8,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 4,000 |
| மூலதனப் புத்துருவாகும் வேலை | 14,000 | |
| தொக்கு – 2022 மார்ச் 31 இல் - கிரயத்தில் | 35,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 30,000 | 34,000 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 26,000 | |
| ஐயக் கடன் ஏற்பாடு – 2021 ஏப்ரல் 01 இல் | | 1,500 |
| காப்புறுதிச் செலவினங்கள் | 12,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 135,000 | 239,500 |
| ஏனைய வருமானம் | | 9,000 |
| செலுத்திய வருமான வரி | 10,500 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி – 2021 ஏப்ரல் 01 இல் | | 8,500 |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 32,000 | |
| விநியோகச் செலவினங்கள் | 34,000 | |
| நிதிச் செலவினங்கள் | 23,000 | |
| நீண்ட காலக் கடன் | | 10,000 |
| | **461,500** | **461,500** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 10 ஆண்டுகள் *(ஆரம்ப ஏற்பிசைவில்)* |
| மோட்டார் வாகனம் | : | 05 ஆண்டுகள் |

(2) இயந்திரக் கணக்கானது 2018 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தை கொண்டுள்ளது. இயந்திரம் கொள்வனவு செய்யப்படும்போது இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரல் 01 இல் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வில் 2021 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலத்தில் 4 ஆண்டுகளே எஞ்சியிருப்பது கண்டறியப்பட்டது.

(3) 2019 ஏப்ரல் 01 இல் ரூபா 6 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் 2021 செப்ரெம்பர் 30 இல் ரூபா 5.4 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இது ஆண்டின்போதான ஒரு விற்பனையாக விற்பனைக் கணக்கில் செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டது. கணக்கேடுகளில் மோட்டார் வாகன விற்பனை தொடர்பில் பெறப்பட்ட விற்பனை வருமானம் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) 2021 ஏப்ரல் 01 இல், கம்பனி அதன் காட்சியறையை நிருமாணிப்பதற்காக 10% வருடாந்த வட்டி வீதத்தில் ரூபா 10 மில்லியன் வங்கிக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டது. கட்டடத்தின் நிருமாணம் 2021 மே 01 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 2022 மார்ச் 31 இல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிருமாணத்திற்காக ஆண்டின்போது செலவிடப்பட்ட கிரயமானது மூலதன புத்துருவாகும் வேலை கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் கடன் மீதான ஆண்டிற்கான வட்டியானது நிதிச் செலவினங்கள் கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டது. மூலதன மீள்கொடுப்பனவை ஆரம்பிக்க இரண்டு வருட சலுகைக் காலத்தை வங்கி வழங்கியிருந்ததுடன் வங்கிக் கடனானது 36 மாதாந்தத் தவணைக் கட்டணங்களில் முழுமையாகச் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.

(5) வணிகத்திற்கு ரூபா 500,000/- செலுத்த வேண்டியிருந்த அதன் வாடிக்கையாளர்களில் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக 2022 மே 20 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்டார், இதனால் அவர் செலுத்த வேண்டியிருந்த தொகையை அறவிட முடியாமற் போயுள்ளது. இது 2021 மார்ச் 31 இல் ஐயக்கடன் ஏற்பாடாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2022 மார்ச் 31 இல் உள்ள எஞ்சிய மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாட்டைப் பேணுவதற்கு கம்பனியின் முகாமை தீர்மானித்துள்ளது.

(6) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் செலுத்திய 2020/21 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 8,500,000/- ஆகும். இந்த செலுத்திய தொகையானது செலுத்திய வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 2021/22 ஆம் வரிமதிப்பாண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 9,750,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) 2022 மார்ச் மாதத்திற்கான மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் முறையே ரூபா 75,000/- உம் ரூபா 35,000/- உம் ஆகும். இவை 2022 மே மாதத்தில் செலுத்தப்பட்டன. இது தொடர்பில் 2021/22 நிதியாண்டிற்கான கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(8) நாட்காட்டி வருடம் 2022 இன் முழுமைக்குமாகச் செலுத்தப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணமானது காப்புறுதிச் செலவினக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

(9) கம்பனியின் பணிப்பாளர் சபையானது நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக 2022 யூன் 05 இல் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்பதற்கு பொருத்தமான வடிவத்தில், **வரையறுக்கப்பட்ட நிடோ லங்கா கம்பனிக்காக** பின்வருவன வற்றைத் **தயாரிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(c) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (02 புள்ளிகள்)

(d) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) 2022 மார்ச் 31 மற்றும் 2021 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டிற்கான **லங்கா பயோ பீ.எல்.சீ.** இன் முற்றடக்க வருமானக் கூற்றுக்களின் பிரித்தெடுப்பும் 2022 மார்ச் 31 மற்றும் 2021 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்களின் பிரித்தெடுப்பும் கீழே தரப்பட்டுள்ளன :

**லங்கா பயோ பீ.எல்.சீ.**

**வருமானக் கூற்றுக்களின் பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2022** | **2021** |
|---|---|---|
| விற்பனை | 568,900 | 402,850 |
| விற்பனைக் கிரயம் | (315,240) | (282,450) |
| மொத்த இலாபம் | 253,660 | 120,400 |
| வட்டிச் செலவினம் | (6,280) | (5,840) |
| வருமான வரி | (3,500) | (4,000) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 26,750 | 18,200 |

**நிதி நிலைக் கூற்றுக்களின் பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல்** | **2022** | **2021** |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 182,400 | 139,500 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 17,250 | 14,500 |
| வியாபார வருமதிகள் | 121,500 | 109,500 |
| தொக்குகள் | 90,000 | 84,500 |
| பங்குதாரர்களின் உரிமையாண்மை | 54,010 | 24,760 |
| | | |
| விநியோகத்திலுள்ள பங்குகளின் எண்ணிக்கை ('000) | 7,500 | 7,500 |

*மொத்த விற்பனையில் 75%* ஆனவை கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் *85%* ஆன விற்பனைக் கிரயம் கொள்வனவுகளை உள்ளடக்கியுள்ளன எனவும் கருதுக.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**லங்கா பயோ பீ.எல்.சீ.** இன் 2022 மார்ச் 31 இலான / முடிவடைந்த நிதியாண்டிற்கான மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(a) மொத்த இலாப விகிதம்

(b) விரைவுச் சொத்துகள் விகிதம்

(c) தொக்கு இருப்புக் காலம்

(d) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(e) பங்கொன்றின் வருமானம் (Earnings Per Share). (05 புள்ளிகள்)

(B) ***லங்கா பயோ பீ.எல்.சீ.*** இயங்குகின்ற துறையின் தொழிற்றுறைச் சராசரிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மொத்த இலாப விகிதம் | 44% |
| விரைவுச் சொத்துகள் விகிதம் | 1.1 : 1 |
| தொக்கு இருப்புக் காலம் | 60 நாட்கள் |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 45 நாட்கள் |
| பங்கொன்றின் வருமானம் | ரூபா 4.50 |

**நீங்கள் செய்யவேண்டியது :**

முரண்களுக்கான சாத்தியமான காரணங்களை விளக்கி, தொழிற்றுறைச் சராசரிகளுடன் ***லங்கா பயோ பீ.எல்.சீ.*** இன் மேற்படி விகிதங்களை ஒப்பிட்டு, சுருக்க (summary) அறிக்கை ஒன்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

***கங்கா பீ.எல்.சீ.*** ஆனது 2021 ஏப்ரல் 01 இல் ***ஜமுனா பீ.எல்.சீ.*** இன் 80% ஆன சாதாரண பங்கு மூலதனத்தை ரூபா 90 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. கொள்வனவினால் எழுகின்ற நன்மதிப்பு ரூபா 5 மில்லியனாகக் காணப்பட்டது.

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **கங்கா பீ.எல்.சீ.** மற்றும் **ஜமுனா பீ.எல்.சீ.** ஆகியவற்றின் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | **கங்கா பீ.எல்.சீ.** | **ஜமுனா பீ.எல்.சீ.** |
|---|---|---|
| விற்பனை | 435,000 | 245,000 |
| விற்பனைக் கிரயம் | (269,700) | (147,000) |
| **மொத்த இலாபம்** | **165,300** | **98,000** |
| **பிற வருமானம் :** | | |
| வாடகை வருமானம் | 1,200 | 6,000 |
| பங்கிலாப வருமானம் | 600 | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மீதான இலாபம் | 2,400 | 1,320 |
| **செலவினங்கள் :** | | |
| விநியோகச் செலவினங்கள் | (27,500) | (16,000) |
| நிருவாகச் செலவினங்கள் | (56,000) | (36,500) |
| நிதிச் செலவினங்கள் | (11,500) | (16,500) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 74,500 | 36,320 |
| வருமான வரி | (12,500) | (8,400) |
| ஆண்டிற்கான இலாபம் | 62,000 | 27,920 |
| பிற முற்றடக்க வருமானம் | 1,200 | (1,300) |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | **63,200** | **26,620** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் காலப்பகுதியில், **ஜமுனா பீ.எல்.சீ.** ஆனது ரூபா 50 மில்லியன் கிரயமான பொருள்களை கிரயத்தில் 20% இலாபம் வைத்து **கங்கா பீ.எல்.சீ.** இற்கு விற்பனை செய்தது. 2022 மார்ச் 31 இல் ரூபா 30 மில்லியன் பெறுமதியான தொக்கு விற்பனை செய்யப்படாது **கங்கா பீ.எல்.சீ.** இன் களஞ்சியத்தில் காணப்பட்டது. இந்தத் தொக்கானது **ஜமுனா பீ.எல்.சீ.** இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

(2) ஆண்டின் காலப்பகுதியில், **ஜமுனா பீ.எல்.சீ.** இன் களஞ்சியசாலையை பயன்படுத்துகின்றமைக்காக **ஜமுனா பீ.எல்.சீ.** இற்கு வருடாந்த வாடகை ரூபா 1,000,000/- இனை **கங்கா பீ.எல்.சீ.** செலுத்தியிருந்தது. இது **ஜமுனா பீ.எல்.சீ.** இன் கணக்கேடுகளில் பிற வருமானமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) **கங்கா பீ.எல்.சீ.** இன் பங்கிலாப வருமானமானது **ஜமுனா பீ.எல்.சீ.** இடமிருந்து பெற்ற பங்கிலாபத்தை மாத்திரம் உள்ளடக்குகிறது.

(4) 2021 ஏப்ரல் 01 இல், **கங்கா பீ.எல்.சீ.** ஆனது ரூபா 6,000,000/- இற்கு **ஜமுனா பீ.எல்.சீ.** இற்கு இயந்திரமொன்றை விற்பனை செய்திருந்தது. இந்த இயந்திரமானது அந்தத் திகதியில் **கங்கா பீ.எல்.சீ.** இன் ஏடுகளில் ரூபா 5,000,000/- என்ற முன்கொணரற் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2021 ஏப்ரல் 01 இல் எஞ்சியிருந்த இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருந்தது. இயந்திரத்தின் விற்பனை மீதான இலாபம் **கங்கா பீ.எல்.சீ.** இன் பிற வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(5) சேத இழப்புச் சோதனை (impairment test) 2022 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில், கம்பனியின் கொள்வனவு மீதான நன்மதிப்பு ரூபா 2 மில்லியனால் சேத இழப்பு அடைந்திருந்தமை தெரியவந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |